## ஏப்ரல் - 10 - திங்கள்

**ஆண்டவரே என் ஒளி: அவரே என் மீட்பு: யாருக்கு நான் அஞ்சவேண்டும்? திபா. 27:1**

### முதல் வாசகம்: ஏசாயா 42: 1 – 7

இதோ! என் ஊழியர்! அவருக்கு நான் ஆதரவு அளிக்கிறேன் நான் தேர்ந்துகொண்டவர் அவர் அவரால் என் நெஞ்சம் பூரிப்படைகின்றது அவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன் அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார். அவர் கூக்குரலிடமாட்டார் தம்குரலை உயர்த்தமாட்டார் தம் குரலொலியைத் தெருவில் எழுப்பவுமாட்டார். நெரிந்த நாணலை முறியார் மங்கி எரியும் திரியை அணையார் உண்மையாகவே நீதியை நிலை நாட்டுவார். உலகில் நீதியை நிலைநாட்டும்வரை அவர் சோர்வடையார் மனம் தளரமாட்டார் அவரது நீதிநெறிக்காகத் தீவு நாட்டினர் காத்திருப்பர். விண்ணுலகைப் படைத்து விரித்து, மண்ணுலகைப் பரப்பி உயிரினங்களைத் தோன்றச் செய்து, அதன் மக்களுக்கு உயிர்மூச்சுத் தந்து, அதில் நடமாடுவோர்க்கு ஆவியை அளித்தவருமான இறைவனாகிய ஆண்டவர் கூறுவது இதுவே: ஆண்டவராகிய நான் நீதியை நிலைநாட்டுமாறு உம்மை அழைத்தேன் உம் கையைப் பற்றிப்பிடித்து, உம்மைப் பாதுகாப்பேன் மக்களுக்கு உடன்படிக்கையாகவும் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் நீர் இருக்குமாறு செய்வேன். பார்வை இழந்தோரின் கண்களைத் திறக்கவும், கைதிகளின் தளைகளை அறுக்கவும், இருளில் இருப்போரைச் சிறையினின்று மீட்கவும் உம்மை அழைத்தேன்.

**பதில்பாடல்:** ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு

### நற்செய்தி : யோவான் 12 : 1 - 11

பாஸ்கா விழாவுக்கு ஆறு நாளுக்கு முன்பு இயேசு பெத்தானியாவுக்குச் சென்றார். அங்குதான் இயேசு இலாசரை உயிர்த்தெழச் செய்தார்.அங்கு அவருக்கு விருந்து அளிக்கப்பட்டது. மார்த்தா உணவு பரிமாறினார். இயேசுவோடு பந்தியில் அமர்ந்திருந்தவர்களுடன் இலாசரும் இருந்தார்.மரியா இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத்தைலம் ஏறக்குறைய முந்நூற்று இருபது கிராம் கொண்டுவந்து இயேசுவின் காலடிகளில் பூசி, அதனைத் தமது கூந்தலால் துடைத்தார். தைலத்தின் நறுமணம் வீடெங்கும் கமழ்ந்தது.இயேசுவின் சீடருள் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்க இருந்தவனுமான யூதாசு இஸ்காரியோத்து,"இந்தத் தைலத்தை முந்நூறு தெனாரியத்துக்கு விற்று, அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாதா?" என்று கேட்டான்.ஏழைகள்பால் கொண்டிருந்த அக்கறையினால் அல்ல மாறாக அவன் ஒரு திருடனாய் இருந்ததால்தான் இப்படிக் கேட்டான். பணப்பை அவனிடம் இருந்தது. அதில் போடப்பட்ட பணத்திலிருந்து அவன் எடுத்துக் கொள்வதுண்டு.அப்போது இயேசு, "மரியாவைத் தடுக்காதீர்கள். என் அடக்க நாளை முன்னிட்டு அவர் இதைச் செய்யட்டும்.ஏழைகள் உங்களோடு என்றும் இருக்கிறார்கள். ஆனால் நான் உங்களோடு என்றும் இருக்கப்போவதில்லை" என்றார்.இயேசு அங்கு இருப்பதை அறிந்த யூதர்கள் பெருந்திரளாய் வந்தார்கள். அவர்கள் இயேசுவை முன்னிட்டு மட்டும் அல்ல, அவர் உயிர்த்தெழச் செய்திருந்த இலாசரைக் காண்பதற்காகவும் வந்தார்கள்.ஆதலால் தலைமைக் குருக்கள் இலாசரையும் கொன்றுவிடத் திட்டமிட்டார்கள்.ஏனெனில் இலாசரின் காரணமாக யூதர்களிடமிருந்து பலர் விலகி இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர்.

**தியானம்:** இன்று பரிசுத்த வாரத்தில் காலடி எடுத்து வைத்துள்ளோம். இசேவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பன முடிந்துவிட்ட நிகழ்வல்ல, எமது வாழ்வுடன் இணையும் பாலமாகும். வாழ்வின் அர்த்தத்தை சிலுவையின் நிழலில் பார்ப்போம். எமது வாழ்வும் இயேசுவின் சிலுவைப் பாடுகளுடன் பின்னிப் பிணைந்திருப்பதைக் கண்கூடாகக் காணலாம். யூதகுலம் பாவம் என்னும் வெள்ளத்தில் விழுந்து அதிலிருந்து நீந்த முடியாமல் நசுக்கப்பட்டு நம்பிக்கையிழந்திருந்த நிலையில் ஆண்டவரின் ஊழியர் அவர்களை மீட்பார் என்பதை எடுத்துக் கூறும் வாசகமாக முதல் வாசகம் அமைகின்றது. இயேசுவின் மேல் கொண்ட பாசத்தினால் அவருடைய பாதங்களில் நறுமணத் தைலம் கொண்டு கூந்தலால் துடைப்பதையும், அதனை யூதாஸ்கரியோத் விமர்சனம் செய்வதையும், இயேசு இலாசரை உயிர்பித்ததால் மக்கள் கூட்டம் அவரை காணவருவதைக் கண்ட தலைமைக் குருக்கள் இயேசுவின் மேல் பொறாமை கொள்வதையும் இன்றைய நற்செய்தி வாசகத்தில் காண்கின்றோம். எம்முடைய வாழ்க்கைப் பாதையில் நாமும் பல முறைகளில் ஏனையவர்களை விமர்சிப்பவர்களாகவும், குற்றம் கண்டுபிடிப்பவர்களாகவும், பொறாமை கொண்டவர்களாகவும், வாழ விளைகின்றோம். இவ்வாறான செயல்கள் எல்லாம் இறைவனை விட்டு வெகுதூரத்திற்கு எம்மை அழைத்துச் சென்றுவிடும் சாத்தானின் செயல்களாகும். இயேசு கொடிய வேதனையின் போது துடிதுடிக்கும் வேளையிலும், பிதாவே இவர்கள் அறியாமல் செய்கின்றார்கள் இவர்களை மனனியும் என்று கூறிய வசனம் எங்களுக்கும் தான். எனவே எம் உறவுகள், நண்பர்கள், அயலவர்கள் மட்டில் மன்னிப்பு, விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வுடன் வாழ இறைவனிடம் வரம் வேண்டுவோம்.